**O.S.No.94/2013**

வா.சா.1, திரு. சந்திரன்
நாள் : 02.03.2026 நேரம் : 11.45 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)4ம் வாதியான இந்திராணி என்பவர் எனது மூத்த சகோதரி என்றால் சரிதான். அவரது கணவர் பெயர் உத்தமன் என்றால் சரிதான். உத்தமன் என்பவர் வருவாய் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். உத்தமனின் தகப்பனார் பெயர் கார்மேகம் என்றால் சரிதான். கார் மேகம் என்பவர் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். தற்போது தாவா சொத்திற்கு பட்டாவின் அடிப்படையில் உரிமை கோருகிறேனா அல்லது பத்திரத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேனா என்றால் பத்திரத்தின் அடிப்படையில் தான் உரிமை கோருகிறேன். நான் குறிப்பிடும் பத்திரம் எது என்றால் எனது பாட்டி கருப்பாயி கருப்பணன், பெருமாள் என்பவர்களிடமிருந்து கிரையம் பெற்றார் . எனது பாட்டி கருப்பாயிக்கு எனது தாயார் முனியம்மாள் மட்டுமே ஒரே வாரிசாவார்.

2) மேற்படி எனது பாட்டி கருப்பாயி கிரையம் பெற்ற பத்திரத்தை தான் வா.சா.ஆ.1 ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்தில் தெற்கு மாலாக குறிப்பிடப்பட்டுள்ள உடையார் மகள் உச்சம்மை புஞ்சை தற்போது பிரதிவாதியின் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல. என் கைவசம் தான் உள்ளது. மேற்படி உச்சம்மையின் மகள் மணியக்காள் என்றாலும், மணியக்காளின் மகள் தான் 1ம் பிரதிவாதி லட்சுமி என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 பத்திரத்தில் எழுதி கொடுத்தவர்களுக்கு கிரைய பாத்தியமான சொத்து என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூல பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பத்திரத்தை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன்.

3)வா.சா.ஆ.1 ஐ எனது பாட்டிக்கு எழுதி கொடுத்த கருப்பணன் மற்றும் பெருமாள் யாரிடமிருந்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி எங்கள் சொத்திற்கு வடக்கே யார் சொத்து உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 பத்திரத்தில் வடக்கு மாலாக எங்கள் காலிமனை என்று கருப்பணன் மற்றும் பெருமாளிடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கும் வடக்கே கம்மாக்கரை உள்ளது என்றால் சரிதான். நான் பிராதில் குறிப்பிட்டுள்ள தாவா மற்றும் அதனை சுற்றியுள்ள சொத்துகளும் பழைய கிராம நத்தம் சர்வே எண். 14 ல் உட்பட்டது என்றால் சரிதான். அதிலிருந்து தான் உட்பிரிவாகியுள்ளது. மேற்படி சொத்துகளுக்கு 1990 க்கு பின்னர் சர்வே செய்து பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

4)வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் சொத்துகள் சர்வே எண்.352 ல் அடங்கியுள்ளது என்றாலும், மேற்படி சர்வே எண்.352 எட்டு பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். எங்களுக்கு எந்த உட்பிரிவில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.352/1 ல் வழங்கப்பட்டுள்ளது. எங்கள் சொத்திற்கும் தெற்கே பிரதிவாதிகள் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. உச்சம்மை வகையறாவின் சொத்து உள்ளது. மேற்படி தெற்கே உள்ள உச்சம்மை வகையறாவின் சொத்து தான் பிரதிவாதிகளின் சொத்து என்றால் சரியல்ல. எங்கள் கைவசம் உள்ளது. எங்கள் சொத்தான சர்வே எண்.352/1 க்கு தெற்கே எந்த சர்வே எண் உள்ளது என்றால் சர்வே எண் தெரியாது. உச்சம்மை சொத்து தான் உள்ளது. எங்களுக்கும், பிரதிவாதிகள் வகையறாவிற்கும் எத்தனை வருடமாக பிரச்சனை நடந்து வருகிறது என்றால் 2013 முதல் இருந்து வருகிறது. அதற்கு முன்னர் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்.

5)பிரதிவாதிகள் சொத்து எங்குள்ளது என்றால் தென்வடல் பாதைக்கும் கிழக்கே உள்ளது. மேற்படி தென்வடல் பாதை என்பது தாவா சொத்திற்கு கிழக்கே உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சொத்து சர்வே எண்.

354ல் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் சொத்திற்கு வடக்கே தெரு உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தெருவிற்கும் வடக்கே குமரவேல் என்வரின் வீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி குமரவேல் என்பவர் சர்வே எண்.354/1ல் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் மீது பாதைக்காக இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 31/2008 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் மேற்கண்ட அசல் வழக்கு எண். 31/2008 க்கு மேல்முறையீட்டு வழக்கு எண். 2/2017ல் குமரவேலுக்கு உரிமை இல்லை என்று உத்தரவு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

6)எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் 1990ல் தாவா சொத்து சம்மந்தமாக குற்றவியல் வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட இடத்தை விட குறைவான இடத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று 2010ல் பரமக்குடி வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதிகளாகிய நாங்கள் ஆஜராகி எதிர்வாதம் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் எதிருரையில் கிராம நத்தம் சர்வே எண். 352/1 எங்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், சர்வே எண். 352/4 சொத்தானது மனுதாரராகிய 1ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் நடைபெற்ற வழக்கில் 2012ல் உத்தரவானது என்றால் சரிதான். தற்போது தாக்கல் செய்துள்ள வழக்கில் பழைய சர்வே எண். 14 ஐ மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சர்வே எண். 352யோ, அதன் உட்பிரிவையோ குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனது வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும். அது பற்றி எனக்கு தெரியாது. அது ஏன் பிராதில் குறிப்பிடவில்லை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

7)எனது பிராதில் எனக்கு தென்வடல் அளவை குறைத்து பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி

பட்டாவை சரியான அளவிற்கு கொடுக்குமாறு வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் தரப்பில் தவறான அளவிற்க பட்டா வழங்கப்பட்டுள்ளதாக மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது போல் எங்கள் தரப்பில் எங்கள் சொத்திற்கு குறைவான அளவிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 352/1ல் வாதிகளுக்கு பட்டாவும், சர்வே எண். 352/4ல் பிரதிவாதிகளுக்கு பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது என்றாலும் பிரதிவாதிகள் சொத்து தாவா சொத்திற்கு தெற்கே உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் இடம் வாதிகள் இடத்திற்கு கிழக்கே உள்ள பாதைக்கும் கிழக்கே உள்ளது. சர்வே எண். 352/1 மற்றும் சர்வே எண். 352/4க்கும் இடையே உள்ள எல்லை தான் தற்போது தரப்பினர்களுக்குள் பிரச்சனை என்றால் சரிதான்.

8) சர்வே எண். 352/1ல் உள்ள சொத்தில் முதலில் ஓட்டு வீடுகள் தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி ஓட்டு வீடுகள் நீக்கப்பட்டு தாரிசு வீடுகள் உள்ளதா என்றால் ஒரே ஒரு வீட்டை தான் தாரிசு வீடாக மாற்றப்பட்டுள்ளது. மற்றவை அனைத்தும் ஓட்டு வீடுகளாகத்தான் உள்ளது. எனது சொத்தின் தென்மேற்கு மூலையில் புளியமரம் ஒன்று உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கீழ்புறம் தென்வடல் தெருவானது கமிஷ்னர் வரைபடத்தில் KR7,KR6 என்னும் குறியீடுகளில் முடிவடைகிறது என்றால் எனக்கு படித்து பார்க்க கண் தெரியவில்லை. மேற்படி தெற்கே உள்ள தெருவானது பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கமிஷ்னர் வரைபடத்தில் KR7,KR6 என்னும் குறியீடுகள் வரைதான் சிமிண்ட் ரோடு போடப்பட்டுள்ளது என்றாலும் தெற்கே உள்ளது தனிநபர் பாதை என்பதால் ரோடு போடப்படவில்லை என்றாலும் கிராமத்தில் சில இடங்களில் ரோடு போடவில்லை மேற்படி சிமிண்ட் ரோட்டிற்கு தெற்கேயும் எங்களுக்கு பாதை உள்ளது.

9)கமிஷ்னர் வரைபடத்தில் KR7,KR6 என்னும் குறியீடுகளுக்கு நேர் மேற்கே உள்ள வடபகுதி தான் வாதிகளின் சொத்து என்றால் கமிஷ்னர் வரைபடத்தில் உள்ளது பற்றி எனக்கு தெரியாது. எனது வழக்கறிஞருக்கு தான்

தெரியும். எங்களுக்கு முதலில் நத்தம் சர்வே எண். 352/1ல் பட்டா வழங்கப்பட்டது 552 சதுர மீட்டருக்கு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 552 ச.மீட்டரை தான் பின்னர் திருத்தி 880 ச.மீட்டருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு சர்வே எண். 352/4ல் முதலில் 1790 ச.மீட்டராகவும், பின்னர் திருத்தப்பட்டு 1535 ச.மீட்டராகவும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டா விஸ்தீரணம் திருத்தப்பட்ட போது எந்த விசாரணையும் இல்லாமல் திருத்தப்பட்டது என்றால் அவ்வாறு விசாரணை எதுவும் நடைபெறவுமில்லை. பட்டா திருத்தப்படவுமில்லை.

10)எனது அக்காவின் கணவர் உத்தமன் என்பவர் வருவாய் துறையில் பணிபுரிந்ததால் பட்டாவில் விஸ்தீரணத்தை திருத்தி வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை குறிப்பிட்டு தான் RDO நடைமுறையில் பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்தார்கள் என்றால் சரிதான். ஆனால் அது தவறு. மேற்படி RDO மனுவின் பட்டாவில் உள்ள விஸ்தீரணம் இறுதி செய்யப்பட்டுவிட்டதால் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று உத்தரவானது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது விஸ்தீரணம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பட்டாவில் திருத்தம் செய்துள்ளதால் தான் சர்வே எண். 352ல் உட்பிரிவு செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணத்தில் tally ஆக வில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்து சர்வே எண். 352/1, 352/4ல் அடங்கியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பதிலுறையில் பத்தில் 6ல் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை மற்றும் திருத்தப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள உட்பிரிவு செய்யப்பட்டுள்ள சர்வே எண்கள் தாவா சொத்திற்கு உரியது அல்ல என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11)தாவா சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் உள்ள சொத்து மட்டும் தான் பிரதிவாதிகளின் சொத்து என்று நான் சொல்வது சரியல்ல என்றாலும், எங்களுக்கு சர்வே எண். 352/1ல் முதலில் கொடுக்கப்பட்ட 550 ச.மீட்டருக்கு

தென்புறம் உள்ள சொத்து தான் பிரதிவாதிகள் சொத்து என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனைவரும் வெளியூரில் இருந்ததை பயன்படுத்தி அவர்களின் சொத்தையும் சேர்த்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கட்டும் போது தெற்கு பார்த்த வாசல் வைத்தேன் என்றாலும் பாதையாக புழங்கவதற்கு பாதை கேட்டேன் என்றாலும் அதற்காக கமிஷ்னர் வரைபடத்தில் கண்ட GH லைன் வரை பாதைக்காக பிரதிவாதிகள் விட்டு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இடத்தில் வடக்கே  முதலில் கல் ஊன்றியிருந்தார்கள் என்றால் சரிதான். 2013 ல் கல் ஊன்றினார்கள். அதற்கு பின்னர் முறையாக பத்திரத்தின் படி அளக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்தோம். மேற்கண்ட கல் ஊன்றும் போது இரு தரப்பினர்களும் இருந்தோம் என்றால் சரிதான். ஆனால் அதற்கு மறுப்பு தெரிவித்தோம். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

12)பிரதிவாதிகள் வகையறா வெளியூரில் இருப்பதை பயன்படுத்தி கொண்டு பிரதிவாதிகளின் இடத்தில் தொடர்ந்து ஆக்கிரமிப்பு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் பிரதிவாதிகள் இடத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்று தாவா சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5,6 ஆவணங்கள் பற்றி பிரதிவாதிகளுக்கு  தெரியாது என்றால் சரியல்ல. கமிஷ்னர் இடத்தை அளக்கும் போது முன் பத்திரங்களின் அடிப்படையில் அளக்கவில்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.05 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.03.02 15:14:22 +0530